Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
(சி-8689) தர்மபுரம்.

பக்கங்கள் – IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி –15 27–02–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –009

# விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தேர்தல் நடாத்துவதற்கான கோரிக்கைகள் வலுவடைகின்றன

## தேர்தல் ஆணையாளருக்கும் மகஜர்

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தேர்தல் நடாத்தப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன. இதனை வலியுறுத்தி மகஜர்களும் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த வகையில், வவுனியா வடக்குப் பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் இது தொடர்பாக மகஜர் ஒன்றைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று வவுனியா வடக்குப் பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் சிறிலங்கா தேர்தல் ஆணையாளருக்கு அளித்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், வவுனியா பிரதம தெரிவத்தாட்சி

(IVஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பகுதியில் பிரச்சாரம் செய்ய பொலிசாரின் பாதுகாப்புத் தேவை

## டக்ளஸ் வேண்டுகை

(கொழும்பு)

வரும் பொதுத் தேர்தலில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் போன்று வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களும் வாக்களிக்க உள்ளதால் அந்த மக்களுக்கு தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய கடமை உள்ளதாக ஈ.பி.டி.பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதற்காக தங்கள் பிரச்சாரங்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்வதற்கு ஏ.9 வீதி

(IVஆம் பக்கம் பார்க்க)

# நிரந்தரத் தீர்விற்கான சமாதான முயற்சிகள் முன்னெடுப்பதனை அமெரிக்கா விரும்புகிறது!

## யு.எஸ். எயிட் திட்ட முகாமையாளர் செல்வி பிரெண்டா பரட்

(திருமலை)

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்;நிரந்தரத் தீர்வுக்கு அது வழிகோலும் என்று அமெரிக்கா நம்புகின்றது- இவ்வாறு யு.எஸ். எயிட். பிராந்திய திட்ட முகாமையாளர் செல்வி பிரெண்டா பரட் நேற்று தெரிவித்தார்.

திருகோணமலை அரசாங்கத் தொழில்நுட்பக் கல்லூரியில் தையல் பயிற்சி நெறி ஒன்றை போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த யுவதிகளுக்காக ஆரம்பித்து வைத்த பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இத்தையல் தொழிற் பயிற்சி நிலையம் பாதிக்கப்பட்ட இளைஞர்-யுவதிகள் தொழிலைக் கற்றுக் கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிலில் திறமையை மாத்திரமல்ல, இனங்களுக்குள் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஒரு இடத்தில் கூடி பயிற்சி பெறும்போது வளர்த்துக் கொள்ள வேண்டும். சமாதானத்தின் பயன்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்குரிய பாரிய பங்களிப்பில் இது ஒரு துளியே என்றும் அவர் கூறினார். (25)

# இளவாலை வர்த்தகரை 17ம் திகதி முதல் காணவில்லை!

## –ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(வடமராட்சி)

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கடந்த 17ஆம் திகதி முதல் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது. காணாமல் போன நபரின் மனைவியே இம்முறைப்பாட்டை நேற்று செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்; குறித்த பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான சந்திரசேகரம் கமலசுதன் (வயது23) என்பவரே கடந்த 17ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த தினத்தன்று குறித்த நபரது மனைவியும் அவரது ஆறுமாதக் குழந்தையும் வெளியே சென்றிருந்ததாகவும் அவ்வேளையிலே அவர் காணாமல் போயிருந்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தான் யாழ்.நகரிற்கு செல்வதாக குறிப்பொன்றை எழுதி வைத்துவிட்டே வெளியே அவர் சென்றிருந்ததாகவும் எனினும்

(IVஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்த தற்போதைய தேர்தல் களமமைத்துள்ளது!

## வன்னி முதன்மை வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன்

தமிழர்கள் தமிழராக இருக்கின்றார்களா? இல்லை தமிழ் உணர்வோடு வாழ்கின்றார்களா? என்பதனை தீர்மானிக்கும் தேர்தலாக இன்றைய இந்தத் தேர்தல் வந்துள்ளது என்று வன்னித் தேர்தல் தொகுதியின் தமிழரசு கட்சியின் முதன்மை வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று வன்னித்தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகநிகழ்வில் கலந்துகொண்டு தெரிவித்தார்.

வவுனியா குருமன்காடு கலைமகள் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற நிகழ்வில் மாவீரர்களுக்கான எழுச்சி பாடலை ஆசிரியரான ரதி வழங்கினார். தொடர்ந்து பேசிய செல்வம் அடைக்கலநாதன் இரண்டு வருடமாக போராட்டம் மேலோங்கியதன் காரணமாகவும் ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு காணப்பட்ட விடயங்களில் எந்தவிதமான முடிவும் இன்றி உள்ள இந்த நிலையில் இந்தத் தேர்தல் வந்துள்ளது. தமிழ் மக்கள் சார்பில் வரலாற்றில் முதல்முறையாக இடைக்கால

(IVஆம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதலுக்கு பௌத்த பிக்குகள் தலைமையேற்பு!

## - அமெரிக்க ம.உ.குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்காவில் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் கடந்த ஆண்டு முழுவதும் வாரத்திற்கு பல தாக்குதல்கள் என அதிகரித்து இருந்ததாகவும் இதற்கு பௌத்த பிக்குகளே தலைமை தாங்கி தாக்குதல்களை நடத்தி இருந்தார்கள் என அமெரிக்காவின் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்களை நடத்திய பௌத்த பிக்குமாரில் எவரும் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டி உள்ளது.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றமேற்படின் சர்வதேசம் அதனை அங்கீகரிக்கமாட்டாது!

## மக்கள் மத்தியில் பிரதமர் ரணில் அறிவுறுத்து

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எந்தவித மாற்றத்தையும் சர்வதேசம் அங்கீகரிக்க மாட்டாது. இவ்வாறான சூழல் ஏற்படுமாயின் நாட்டில் மீண்டும் யுத்தம்ஏற்படலாம். இவ்வாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமாலை இடம்பெற்ற ஐக்கியதேசிய முன்னணியின் முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்;

ஐக்கிய மக்கள் சுதந்திர 'முன்னணி ஆட்சியமைக்குமானால் யுத்த நிறுத்த உடன்பாட்டில் குழப்பநிலை ஏற்பட்டு நாட்டில்புதிய சிக்கல்கள் உருவாகலாம்.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் மிகச் சரியான முடிவை தமது வாக்களிப்பின் மூலம் எட்டவேண்டும்.

மீண்டும்யுத்தமா, சமாதானமா, பொருளாதார செழிப்பா, சீரழிவா என்பதை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி தீர்மானித்துத் தீர்ப்பளிக்க வேண்டியது

(IVஆம் பக்கம் பார்க்க)

# ஐ.ம.சுதந்திர முன்னணி ஆட்சியமைத்ததும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்போம்

## 1வது பிரச்சாரக் கூட்டத்தில் சனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அமைக்கப்பட்டதும் நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உரிய வகையில் முன்னெடுத்து செல்லப்படும் என சனாதிபதி கூறியுள்ளார். முன்னணியின் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றபோது அங்கு சனாதிபதி உரையாற்றினார்.

பிரதமர் எனக்கு அறிவிக்காமல் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்கப்போவதில்லை. இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் அவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என சனாதிபதி குறிப்பிட்டார். வரலாற்றில் முதன் முறையாக தமிழீழ விடுதலைப்புலிகள்

(IVஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### லொறி விற்பனைக்குண்டு

டாட்டா மொடல் நம்பர் 1109 கன்டா நம்பர் WPHK 20 அஈ உள்ள பொடி அடித்துள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 470, 6ஆம் யூனிற், இராமநாதபுரம். (4265)

### விசேட வகுப்பு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்பு நடைபெறுகின்றது. ஆசிரியர் திரு. சு.சரவணபவன் (B.Sc) வெண்ணிலா கல்வி நிலையம், மல்லாவி. (4108)

### பெயர்மாற்றம்

சி.தியாகராசா மல்லிகாதேவி என்ற என்னுடைய பெயரை இன்றுமுதல் தியாகராசா தர்சினி என மாற்றியுள்ளேன் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறேன். (4273)

### அமல் பல், மூக்குக் கண்ணாடி அகம்

கண் பரிசோதித்து நவீன பிறேம்களில் கண்ணாடி வழங்குதல் பல் கட்டுதல் மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போடுதல் என்பன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு அமல் பல் மூக்குக் கண்ணாடியகம், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.(3994)

### வெளிவந்து விட்டது

பொதுஅறிவுத் "தேடலும் தெளிவும் - 2004" மிகமிக சமீபகாலத் தகவல்களுடன் A/L ஆசிரியர் போட்டிப் பரீட்சைதரம் 5 பரீட்சைகளுக்கு மிகச் சிறந்த வழிகாட்டி. மன்னார், வவுனியா நகரப் புத்தகசாலைகளிலும், வன்னியில் அறிவமுது புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொளளலாம். விலை 70/=. (4268)

### தவறிவிட்டது

இல.47 புதுவீதி அத்தியடி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இராமச்சந்திரன் ஆகிய எனது கைத்தொலைபேசி (நொக்கியா 3315லைற்புளு) முறிகண்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட விலாசத்திற்கோ /0212226843 இலக்கத்தில் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.(4274)


# 7ஆம் நாள் தேசிய பெருவிளையாட்டு விழாவில் கேடயங்களை தமதாக்கிய அணிகள்

(அலுவலக செய்தியாளர்)

மூன்றாவது தமிழீழத் தேசிய பெருவிளையாட்டுப் போட்டியில் கிளி.லலிதா டிரேடிங்கம்பனியினரின் அனுசரணையுடன் நடைபெற்ற கபடி பெண்களுக்கான இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று கப்டன் திலகா வெற்றிக் கேடயத்தை மட்டு அணியும், பாண்டியன் வாணிபத்தினரின் அனுசரணையுடன் நடைபெற்ற கபடி ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று லெப் கேணல் சந்திரன் நினைவு வெற்றிக்கேடயத்தை வவுனியா அணியும் சுவீகரித்துள்ளன. கப்டன் அன்பரசி நினைவாக நடாத்தப் பெற்ற தாச்சி பெண்களுக்கான போட்டியில் யாழ். அணிகேடயத்தைச் சுவீகரித்தது. லெப்-கேணல் புலேந்திரன் நினைவாக நடாத்தப் பெற்ற தாச்சி ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி அணி கேடயத்தைச் சுவீகரித்தது.

நேற்றைய ஏழாம் நாள் நிகழ்வுகளை மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கீதா தேசியக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். கிளிநொச்சி உதைபந்தாட் சங்கத் தலைவர் கணேசலிங்கம், கிரிக்கெட் இணைப்பாளர் சிவனடியார், அம்பாறை கிரிக்கெட அணியைச் சேர்ந்த முகமட்காலித், அன்ஸகான், யாழ்-கபடி அணித்தலைவர் பொமினிக் கிருபாகரன், மட்டு கிரிக்கெட் அணி உப தலைவர் பிரபாகரன், மட்டு துடுப்பாட்ட வீரர் ஜெய், மட்டு கபடி அணித் தலைவி சியா, யாழ். விளையாட்டு அதிகாரி முகுந்தன் ஆகியோர் மாவீரர் உருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை சூட்டினர்.

கபடி பெண்களுக்கான போட்டிக்கு முன்னதாக விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான ஜெரிக்கு வீராங்கனைகள் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர். ஆண்களுக்கான போட்டிக்கு முன்னதாக வீரர்கள் பெருந்தோட்டப் பகுதிப் பொறுப்பாளர் நக்கீரனுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பெற்றனர்.

பெண்களுக்கான போட்டியில் மட்டு அணி வவுனியா அணியை 21-20 என்ற புள்ளி அடிப்படையிலும், ஆண்களுக்கான போட்டியில் வவுனியா அணி 51-22 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்.அணியையும் வெற்றி கொண்டன.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திருவாளர்கள் ஜஸ்ரின் பெரேரா, விமலசேன, அபேகுணசேகரா, விஜயசிறி ஆகியோர் கடமையாற்றினர்.

மட்டு உப்போடைக்கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கப்டன் அன்பரசி நினைவு வெற்றிக் கேடயத்துக்காக பிற்பகல் நடைபெற்ற பெண்களுக்கான தாச்சி இறுதிப்போட்டியில் யாழ். அணி 2-0 என்ற புள்ளி அடிப்படையில் முல்லை அணியை வெற்றி கொண்டு கேடயத்தைச் சுவீகரித்தது. முன்னதாக வீராங்கனைகள் புகைப்படப்பிரிவு மகளிர் பொறுப்பாளர் கஜானிக்கு அறிமுகம் செய்துவைக்கப்பெற்றனர்.

தொடர்ந்து கிளிநொச்சி இளந்தென்றல் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற ஆண்களுக்கான தாச்சிப்போட்டியின் பரபரப்பான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி அணி 18-17 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். அணியை வெற்றிகொண்டு லெப் கேணல்.புலேந்திரன் நினைவுக் கேடயத்தைச் சுவீகரித்தது. ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா 15புள்ளிகளைப் பெற்றன.



தொடர்ந்து இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட தலா இரு நிமிட நேரத்தில் யாழ்.அணி இருபுள்ளிகளைப் பெற்றது. கிளி.அணி மூன்று புள்ளிகளைப் பெற்றது. முன்னதாக வீரர்கள் வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர் A.W. விமலராஜனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்.S.சசிசராஜ், சி.த.கணேசலிங்கம், கா.ஜெயசீலன் ஆகியோர் கடமையாற்றினர்.

நேற்றைய துடுப்பாட்ட அரையிறுதிப்போட்டியில் கலந்து கொண்ட மட்டு-அம்பாறை அணிகளின் வீரர்கள் திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அம்பாறை அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். 26.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. அம்பாறை அணி-மதன் 19ஓட்டங்களையும், பர்ஸாத் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அருண் பிரசாத் 3 விக்கெட்டுக்களையும், ருபராஜ்,கஜன், ஜெயசீலன் தலா இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டு அணி 19.1 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. 3 விக்கெட்டுக்களால் மட்டு அணி வெற்றிபெற்றது. மோசஸ் 18 ஓட்டங்களையும், ருபராஜ் 14 ஓட்டங்களையும்பெற்றனர். பந்து வீச்சில் காலிதீன் 3 விக்கெட்டுக்களையும், சிராஜ் இருவிக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டிக்கு தெரிவான மட்டு அணி இன்று காலை யாழ்.அணியுடன் மோதவுள்ளது. நேற்றைய போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள்.சிவதரன், ஜேக்கப் ஆகியோரும் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தொலைக்காட்சி நடுவராக (மூன்றாவது நடுவர்) இ.சிறிதரனும் கடமையாற்றினர். (சோ)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பவளவிழா சிறப்புற நடைபெற்றது

(அலுவலகசெய்தியாளர்)

கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 75 ஆம் ஆண்டு நிறைவு (பவளவிழா) நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

மங்கலவிளக்கினை கிளி.வ யக்கல்விப்பணிப்பாளர் ப.அரிய தினம், கிளி.மாவட்ட பிரதிமா ண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழதேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கொடியினை கல்லூரி முதல்வர் இராஜகுலசிங்கம் ஏற்றிவைக்க வரவேற்புரையினை ஆசிரியர் ரவீந்திரன் நிகழ்த்தினார். தொடர்ந்து பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் உரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து பவளவிழா நூல் வெளியீட்டுரையினை கல்லூரி ஆசிரியை திருமதி. கெஜெயராஜ் நிகழ்த்தினார்.

பவளவிழா நூலினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை கிளி.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஆனந்தராசா பெற்றுக் கொண்டார். அடுத்து தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன்,கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் உரைநிகழ்த்தினர். தமிழீழ மாணவர் அமைப்பின் சார்பில் கல்லூரிக்கென பாண்ட் இசைக்கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பெற்றன.

தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றமைகுறிப்பிடத்தக்கது.(சோ)


## 2004.க.பொ.த.(உ/த) கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டலும் கருத்தமர்வும்

கொழும்பிலிருந்து வருகைதரும் முன்னணி ஆசிரியர்களால் 2004 கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டலும் கருத்தமர்வும் கீழ்வரும் நேர ஒழுங்கில் நடைபெற இருப்பதால் பரீட்சைக்குத் தோற்றும் இப் பிரிவு மாணவர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுக் கொள்கின்றனர்.

இடம் :மு/புதுக்குடியிருப்பு ம.வி.
கிளிநொச்சி மத்திய கல்லூரி
காலம்: 28,29.02.2004 (சனி,ஞாயிறு) இரு நாட்களும்.
நேரம்:காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

(3536) தமிழீழ மாணவர் அமைப்பு

## மொழியாக்கம் செய்பவர்களை அங்கீகரிப்பதற்கான வேண்டுகை (ஆங்கிலம்)

மேற்படி விபரம் தொடர்பாக, எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வதியும் ஆங்கிலத்தை மொழியாக்கம் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளோர்களை இனம் கண்டு அவர்களை எமது பகுதிக்குள் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களாக நியமிக்கப்படவுள்ளதால், மொழியாக்கம் செய்யக்கூடிய தகைமையுடையவர்களை (ஆண்,பெண்) 15.03.2004 ஆம் நாளுக்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை (சுயவிபரம் அடங்கிய தகவல்களுடன்) அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
நடுவப்பணியகம், நீதிநிர்வாகத்துறை,
கிளிநொச்சி.

(3997)


# பெண்கள் தலைமையேற்கும் குடும்பங்களில் சுயதொழில் வாய்ப்பிற்கு ஊக்குவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பெண்களை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பிற்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு 25ஆம் திகதி நேற்று முன் தினம் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன் நித்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் கலந்து கொண்டு மேற்படி சுயதொழில் வாய்ப்பிற்கான கொடுப்பனவுகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிபபாளர் மத்தியூஸ், கரைச்சிப் பிரதேச கால்நடை வைத்தியர் ஆகியோர் கலந்து பயனாளிகளுக்கு செயற்திட்ட அறிவுரைக் கருத்துக்களை வழங்கினர்.

சிறுகைத் தொழில் வியாபாரம், கால்நடை வளர்த்தல் போன்ற சுயதொழில் மீளளிப்புக் கடனாக 19 பயனாளிகளுக்கு மேற்படி கொடுப்பனவாக ருபா 2,45,000 வழங்கப்பெற்றது.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் மேற்படி திட்டம் அமுல்படுத்தப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## இரு பசுக்களை காணவில்லை

பொ.மகேஸ்வரன்
இல:124,உதையநகர் மேற்கு,
கிளிநொச்சி

எனது சொந்த பாவனையில் உள்ள இரு பசுக்களை அம்பாள் குளப்பகுதியல்வைத்து காணவில்லை. ஒரு பசு சிகப்பு நிறம் கொம்பு மொட்டை.No.647 குறி பரி என்று வயிற்றில் எழுதியுள்ளது. இரண்டாவது பசு கருத்தரமான மயிலை பசு அதற்கு குறி No இல்லை. கடந்த 22ஆம் திகதி ஞாயிறு தினம் அம்பாள் குளப் பகுதியில் வைத்து இரண்டும் கட்டப்பட்ட இடத்தில் வைத்துக் காணவில்லை. இதைக் கண்டவர்கள் தயவுசெய்து மேல உள்ள விலாசத்திற்கு அறியத்தரவும்.

## இலவசம்

தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் 9.10.11 வகுப்புக்களுக்கான பாடக்குறிப்புக்களை இலவசமாகத் தபாலில் பெற சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

'புதிய பாலம்'
தபால் பெட்டி இலக்கம்10,
வவுனியா.

(சி.4254)

# புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிமக்களும் வாக்களிக்கும் வகையில் அழுத்தம் கொடுக்குக

## சர்வதேச சமூகத்திடம் இரா.சம்பந்தன் கோரிக்கை

(திருமலை)

**புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தமிழ் வாக்காளர்கள் தடையின்றி வாக்குரிமையைப் பயன்படுத்த சம்பந்தப்பட்ட தரப்புக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

"வடக்கு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டுப் பகுதியில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான தமிழ்வாக்காளர்கள் தடை ஏதுமின்றி தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளைச் செய்து கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சர்வதேச சமூகத்தின் மூலம் கடுமையான அழுத்தத்தைக் கொடுக்கவைப்போம்" இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னை நாள் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் தடை செய்தது போன்று எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதித் தமிழ் வாக்காளர்களை வாக்களிக்காமல் தடுப்பதற்குரிய பல[illegible]மான முயற்சிகள் மேற்கொள்[illegible]படுவதாகத் தெரிவிக்கின்றது. [illegible]ந்த தடவை போன்று இந்த [illegible]ற வாக்காளர்களைத் தடுப்பதற்கு காரணங்களைக் கூறமுடியாது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பில் அடுத்த சில தினங்களில் ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டிஷ் தூதர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப்பகுதி தமிழ வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தக் கூடிய நிலவரத்தை உறுதி செய்ய வேண்டும் என்று கோரவிருப்பதாகவும் இரா.சம்பந்தன்தெரிவித்தார்.([illegible]5)

# தேசிய ஹெல உறுமயவுடன் எமக்குத் தொடர்பில்லை

## சிஹல உறுமய அமைப்பாளர் சம்பிக்கரணவக்க

தேசிய ஹெல உறுமயவின் நடவடிக்கைகளுடன் சிஹல உறுமயவிற்கு எவ்வித தொடர்பும் இல்லையென அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்கரணவக்க தெரிவித்துள்ளார்.

தேசிய ஹெல உறுமய ஆறுபேர் கொண்ட பௌத்த பிக்குகளின் அதியுயர் பீடத்தினால் நிர்வகிக்கப்படுவதாகவும் கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், இந்தத் தேர்தலின் போது தேசிய ஹெல உறுமயவை நான் இயக்குவதில்லை அந்தக் கட்சியின் முழுமையான கொள்கைகளையும் செயற்பாடுகளையும் அதேபோல் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்தும் பௌத்த பிக்குகள் அடங்கிய அதியுயர் பீடமே தீர்மானம் மேற்கொள்ளும்.

நாம் அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதோடு பௌத்த பிக்குகளின் குறிக்கோளான தர்ம இராச்சியம் ஒன்றைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளுக்கு எமதும் நாட்டின் மக்களதும் ஒத்துழைப் பைப் பெற்றுக் கொடுப்போம்.

இதற்கமைய தேர்தலுக்குப் பின்னர் பௌத்த பிக்குகளுக்குப் பதிலாக சாதாரண நபர் ஒருவரை பாராளுமன்றத்திற்கு நியமிக் கும் உத்தேசம் இல்லை என்றும் சிஹல உறுமய கூறுகின்றது. (32)

# அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்றார்

அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 44 ஆவது சரத்தின் அடிப்படையில் இது சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு அவரால் கடந்த செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்கப்பட்டதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதி வேறு பல நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேநேரம் இந்த லொத்தரின் மூலம் வீடு ஒன்றைப் பரிசாகக்கொடுக்கும் அண்மைக்காலத்திட்டம் ஒன்றிலும் அவசியமற்ற நிதிவிரயம் ஏற்படுவதாக சனாதிபதி செயலகம் குற்றம் சுமத்துகின்றது. முன்னரும் இவ்வாறு பொறுப்பேற்கப்பட்டதாக அவர் அறிவித்தமை தெரிந்ததே.(32)

# தமிழர் அபிலாசைகளை வெளியுலகிற்கு கொண்டுவரும் தேர்தலாக இது அமையும்

## வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தல் தமிழர்களின் அபிலாசைகளை வெளியுலகிற்கு கொண்டு வருவதாக அமையவுள்ளது என்று வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கை இனவாதிகளுக்கும் இந்தத் தேர்தல் நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையவுள்ளது.

இராணுவ ரீதியில் பலமாகவுள்ள விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியில் முன்நகர்ந்து செல்வதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைவது முக்கியம்.

விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுள்ள தமிழர் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை வெளிக் கொணர்வதற்கான சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்த வேண்டும் எனவும், இதனை தமிழ் மக்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# அரச சொத்துக்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க சனாதிபதி செயலகம் முயல்வது தவறானது!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடைபெறும் காலங்களில் அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தும்போது அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கும் தேர்தல் செயலகத்திற்கும் மட்டுமே உண்டு என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும்போது; சனாதிபதி செயலகம் இது தொடர்பாக அறிக்கைகள் விடுவது தவறான செயற்பாடு என்றும் கூறியுள்ளார்.

அரச ஊடகப்பேச்சாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே இந்தக் கருத்துக்களை பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எமது அரசியல் யாப்பிற்கு அமைய இந்த அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளருக்கே வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையாளர் என்பவர் பக்கச் சார்பற்ற ஒருவர். சனாதிபதியும் ஒரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் சனாதிபதி செயலகம் அவ்வாறு பக்கச் சார்பற்ற நிறுவனம் அல்ல.

இதனால், அரச சொத்துக்களைப் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானங்களை எடுப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் முழுமையான பொறுப்பு தேர்தல் ஆணையாளருக்கும், அவரது அலுவலகத்திற்குமே இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விருப்பு தெரிவு இலக்கங்கள் இன்று வெளியிடப்படும்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் வேட்பாளர்களுக்கான விருப்பு தெரிவு இலக்கங்கள் இன்று வெளியிடப்படும் என தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் மொத்[illegible]முள்ள 196 தேர்தல் தொகுதிகளில் 5698 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்கள் 24 கட்சிகளையும் 192 சுயாதீன குழுக்களையும் சேர்ந்தவர்கள்.

இதேவேளை வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் நேற்றுமாலை முதல்ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார். இதற்காக பிரித்தானியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விசேடகடதாசிகள் பயன்படுத்தப்படவுள்ளன. (32)

# பிந்துனுவெவ கொலை தீர்ப்பை விசாரிக்க உயர்நீதிமன்றம் முடிவு

பண்டாரவளை பிந்துனுவெவ தமிழ் இளைஞர் கொலை வழக்கில் மரணதண்டனை பெற்றவர்களின் மேன்முறையீட்டை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் தலைமை நீதியரசர் சரத்என்சில்வாவின் தலைமையில் 5பேர் அடங்கிய நீதியரசர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டு ஒக்டோபர் 25ம் திகதி 28 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் தியத்தலாவ மற்றும் பண்டாரவளை பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர், உதவிப்பரிசோதகர் உட்பட 5பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. இதேவேளை இவர்களின மேன்முறையீட்டு விசாரணைகளை உயர்நீதிமன்றம் எதிர்வரும் யூலை 6ம் திகதி நடாத்தவுள்ளது. (32)

# வடக்கு-கிழக்கில் இனப்பிரச்சினை கிடையாது அரசியல்வாதிகளே அவ்வாறு கூறுகின்றனர்

## -எல்லாவல மேதானந்த தேரர்

இலங்கையில் தற்போது இனப்பிரச்சினை ஒன்று இல்லை. வடக்கு கிழக்கில் இடம்பெற்ற தீவிரவாதத்தை இனப்பிரச்சினை என்று அரசியல் வாதிகளே சித்தரிக்கின்றனர் என எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுவரை நடைபெற்ற யுத்தம் அரசியல் வியாபாரமே அன்றி ராணுவத்தினருக்கு பெரும் தலைமைத்துவம் கொடுத்து மேற்கொள்ளப்பட்ட யுத்தம் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.தம்மை சிங்களவர்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளும் சிங்களக் கட்சிகள் இதுவரை நாட்டு மக்களை ஏமாற்றி வந்துள்ளன.

நாடும் பாரிய அழிவை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் சிங்களவர்கள் ஒற்றுமையுடனும் புத்திக்கூர்மையுடனும் செயற்பட வேண்டும் என எல்லாவல மேதானந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 4 பலஸ்தீன வங்கிகள் மூடப்பட்டன எதிர்த்த மக்கள்மீது கடும் தாக்குதல்!

## ஐவரின் நிலை கவலைக்கிடம்

(டெல்அவிவ்)

பலஸ்தீனத்தின் ரமல்லா பகுதியில் உள்ள நான்கு வங்கிகளை இஸ்ரேலிய துருப்பினர் மூடி சீல் வைத்துள்ளனர்.

இஸ்ரேலியர் மீது தாக்குதல் நடத்தும் அமைப்புக்கு இந்த வங்கிகள் மூலம் நிதி அனுப்பி வைக்கப்படுவதாக குற்றம் சாட்டியே இந்த வங்கிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மூடப்பட்ட வங்கிகளில் இரண்டு அரேபிய வங்கிகளாகும்.

இந்த வங்கிகள் மூலம் எட்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தொகை தீவிரவாதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது இஸ்ரேலிய படையினர் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் றப்பர்தோட்டாக்கள் கொண்டு துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர். இதனால் 45பேர் காயம் அடைந்துள்ளனர். இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்றும் தெரிவிககப்படுகிறது.

# பா.ஜ.கவுக்கு முஸ்லிம்கள் வாக்களிக்க முன்வரவேண்டும்

## பிரதமர் வாஜ்பாய் அழைப்பு!

(புதுடில்லி)

தனது கட்சி வெற்றி பெறுவதற்கு இந்தியாவாழ் முஸ்லிம்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் அட்டல் பிஹாரி வாஜ்பாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரதீய ஜனதாக்கட்சி பதவிக்கு வந்தால் இந்திய முஸ்லிம்களுக்கு தடையின்றி பாகிஸ்தானுக்கு செல்ல வாய்ப்புக்கிட்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சியினால் மக்கள் சுதந்திரமாக பாகிஸ்தான் செல்லமுடியும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கல்விக் கொள்கையை ஆட்சேபித்து கொழும்பில் ஆர்ப்பாட்டத்திற்கு முயற்சி!

(கொழும்பு)

அடுத்தவாரம் பத்தாயிரம்பேரை கொழும்புக்கு அழைத்துவந்து கல்விக்கொள்கைகளை ஆட்சேபித்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.

மாணவ, மாணவிகள் விரிவுரையாளர்கள் மாத்திரமன்றி பெற்றோர் தமது எதிர்ப்பியக்கத்தில் பங்கேற்பர் என பேரவையின் அமைப்பாளர் ரவீந்திர முதலிகே தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கல்வியைப் பாதுகாப்பது இதன் முக்கிய நோக்கம் எனவும் இலவச பாடநூல் சீருடை விநியோக நடைமுறையை ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஆட்சேபிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி சபைகளை நிறுவி வெளியாருக்கு அவற்றின் பொறுப்புக்களை கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர் பேரவை குற்றம் சாட்டுகின்றது.

# திருமலை, யாழ். அணிகள் கேடயங்கள் வென்றன

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் நேற்று இரவு மின்னொளியில் நடைபெற்ற மேஜர் அல்பேட் நினைவு வெற்றிக் கேடயத்துக்கான ஆண்களுக்கான கரபந்தாட்ட இறுதிப் போட்டியில் திருமலை அணி 25-22, 25-22, 25-18 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். அணியை வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மேஜர் சோதியா நினைவு வெற்றிக் கேடயத்துக்கான வலைபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ். அணி 60-32 என்ற புள்ளி அடிப்படையில் மன்னார் அணியை வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கரபந்தாட்டப் போட்டி வீரர்கள் குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானு, வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோருக்கும், வலைபந்தாட்டப் போட்டி வீராங்கனைகள் மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா மற்றும் வலைபந்தாட்ட பயிற்சியாளர் ரதிகலா ஆகியோருக்கு போட்டிக்கு முன்னதாக அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர்.

# ஐ.தே.முன்னணி அரச ஊடகங்களில் நடைபெறும் அரசியல் கலந்துரையாடல்களை புறக்கணிக்கிறது

### -ஊடகத்துறைஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கவலை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரச ஊடகங்களில் நடைபெறும் அரசியல் கலந்துரையாடல்களைப் பகிஷ்கரித்துவிட்டு அரச ஊடகங்கள் பக்கச் சார்பானவை என்று குற்றம் சுமத்துவது நியாயமானதா? என தற்போதைய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐக்கியதேசிய முன்னணித் தலைமைத்துவத்திடம் வினா எழுப்பியுள்ளார்.

அரச ஊடகங்கள் பக்கச் சார்பாகச் செயற்படுவதாக குற்றம் சாட்டி ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் கப்பு கொட்டுவ எழுதிய கடிதத்திற்கு லக்ஷ்மன் கதிர்காமர் எழுதிய பதில் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரச ஊடகங்களில் முக்கிய பதவிகள் அரசியல் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய முன்னணிச் செயலாளர் தெரிவித்துள்ள குற்றச் சாட்டிற்கு லக்ஷ்மன் கதிர்காமர் பதில் அளிக்கையில;

ஐக்கிய தேசிய முன்னணி நிர்வாகத்தின் கீழ் அரச ஊடகங்களின் முக்கிய பதவிகள் அக்கட்சி ஆதரவாளர்களுக்கே வழங்கப்பட்டிருந்ததாகவும் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலைமையில் அரச ஊடகங்கள்மீது குறை கூறுவது நியாயமான செயல் அல்ல என்றும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருஜெயசூரியாவும் அரச ஊடகங்கள் பக்கசார்பாகச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டி உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# கடல் நீர்வள பாடநெறியை போதிக்க விண்ணப்பம் கோரல்

### -ஆட்சேர்ப்பு திகதியும் நீடிப்பு

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழி மூலம் பாடசாலைகளில ஜி.சி.ஈ உயர்தரத்தகுதி பெற்ற ஆயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கடைசித்திகதி மூன்றாது தடவையாக மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 23ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று கோரும் வர்த்தமானி அறிவித்தல் வார இறுதியில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் கே.சேனநாயக்க, இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவத்துக்கு அறிவித்துள்ளார்.

விண்ணப்பமுடிவு திகதி மேலும் நீடிக்கப்பட மாட்டாதுஎன்று மேலதிகச் செயலாளர் தமக்கு தெரிவித்ததாகவும் மகாசிவம் கூறினார். விண்ணப்பிக்கும் பத்து பாடநெறிகளோடு புதிதாக கடல் நீர்வளம் பாடநெறியும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அதற்குத் தகைமை பெற்றவர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு உதவும்முகமாகவே விண்ணப்பமுடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

### - புது-பொன்னம்பலம் மருத்துவமனையில் -

# சத்திர சிகிச்சை நிபுணரின் இலவச மருத்துவ ஆலோசனை

யாழ் போதனா மருத்துவமனையில் சேவையாற்றிவரும் சத்திர சிகிச்சை நிபுணர் ரவிராஜ் தலைமையிலான மருத்துவர் குழுவினரால் எதிர்வரும் 28ம் 29ம் திகதிகளில் காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் பொது சத்திரசிகிச்சையுடன் சம்பந்தப்பட்ட நோய்களிற்குசிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளன. எனவே இலவசமாக வழங்கப்படவுள்ள மேற்படி சிகிச்சைகளில் பயன்பெறவிரும்புவோர் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு மருத்துவமனை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### -நிக்கொட் உதவியுடன் அமைக்கப்பட்ட-

# பாடசாலை கட்டடங்களை ஒப்படைக்க நடவடிக்கை

நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கபட்ட வன்னிவிளாங்குளம், அ.த.க.பாடசாலை, கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை, மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய கட்டடத்தொகுதிகள் 03ந் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருடாக அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வானது மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. நிக்கொட் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாடசாலைக கட்டட வேலைகளில் முதலில் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்ட பாடசாலைகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்புலிகளின்..

அலுவலரும் அரச அதிபருமான கே. கணேசிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

மகஜரின் விபரம் வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்களின் சுதந்திரமான வாக்களிப்பிற்கான அனுமதியை வேண்டி நிற்கின்றோம். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் சுதந்திரமான உரிமைகளை வெளிக்கொணர முடியாதபடி சிறிலங்கா அரசாலும் படைகளாலும் இரும்புக்கரம் கொண்டு நெரிக்கப்பட்டனர். இதன்பின் ஏற்பட்ட விடுதலைப்புலிகளின் பலமும் ஏனைய மாற்றங்களாலும் ஒரு சமூக நிலையைத் தோற்றுவித்தது. இவ்வேளையில் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் மக்களும் தமது உரிமையை வெளிக்கொணரும் முகமாக நடைபெறவுள்ள 2004ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தயாராகி வருகின்றார்கள். இவர்களது எண்ணங்களை சிதைக்கின்ற வகையில் சிறிலங்காவின் இராணுவத் தளபதி பலகல்ல விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் வாக்களிப்பதாயின் இராணுவச் சோதனைச் சாவடியில் மாத்திரம் கொத்தணி வாக்குச் சாவடியில் வாக்களிக்க முடியும் என்றும், அதற்கு ஆகக் கூடுதலான சோதனை செய்த பின்பே அனுமதிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இக்கூற்றைத் தமிழ்பேசும் மக்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த பொதுத் தேர்தலின் போதும் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் வாக்களிப்பதற்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முற்பட்டபோது இதே இராணுவத் தளபதியால் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதேபோன்று மீண்டும் தனது இராணுவ அடாவடித்தனத்தை நடைமுறைப்படுத்த அவர் முனைகின்றார் போல் உள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இதனைத் தேர்தல் ஆணையாளரே தீர்மானிக்க வேண்டும் என்பதை கேட்டுக் கொள்வதோடு விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியில் வன்னித் தேர்தல் தொகுதியில் 85685 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் இருப்பதனால் இவர்கள் வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் அம்மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே தீர்மானிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்கி இம்மக்களின் உரிமைகளை நிராகரிக்காது ஏற்ற ஒழுங்குகளைச் செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (21)

## தமிழர்களின்...

நிர்வாக திட்ட நகல் கையளிக்கப்பட்ட நிலையில் வந்துள்ளது.

இன்றைய இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்கள்தான் ஒரு நேர்த்தியான முடிவை எடுக்கவேண்டியவர்களாக உள்ளனர் என்றார்.

அத்துடன் இம்முறை 23க்கு மேற்பட்ட ஆசனங்களையும் தமிழர் கூட்டமைப்பு பெறும் என்றும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் தமிழரசு கட்சிசார்பாக போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். (21)

## இளவாலை....

பின்னர் அவர் தொடர்பாக எந்தவித தகவலும் கிட்டவில்லையெனவும் அவரது மனைவி மேலும் கூறியுள்ளார். (27)

## புலிகளின்....

யூடான தமது போக்குவரத்திற்கு பாதுகாப்புடனான ஒழுங்குகளைச் செய்துதர வேண்டும் என சிறிலங்கா பொலிஸ்மா அதிபரிடம் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

## புரிந்துணர்வு....

சிந்தனை தெளிவான மக்களின் செயலாகும் என்று கூறினார்.

கண்டி மத்திய சந்தைக்கு எதிரில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தலில் நின்று அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கரகோசத்துக்கிடையே உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் கூறியதாவது;

நாம்2001ஆம்ஆண்டு டிசம்பர் மாதம்அரசாங்கத்தைப் பொறுப்பேற்றபோது நாட்டின் பொருளாதாரம் முற்றாக சீரழிந்திருந்தது. இன்று நாட்டில் யுத்தம் இல்லை. சமாதானம் நிலவுகின்றது. சீரழிந்த பொருளாதாரத்தை கடந்த 2ஆண்டுகளில் பெருமளவு வளப்படுத்தி அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கும் சூழ்நிலையை உருவாக்கத் தயாராகிக் கொண்டிருந்த வேளையிலேயே சனாதிபதி எவ்வித காரணமுமின்றி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நமக்குள் திணித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்குமிடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாக நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது. மக்கள் பல்வேறு துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டுள்ளனர். உலக நாடுகளின் ஆதரவோடு நாட்டில் சமாதானத்தை உருவாக்கி இனப்பிச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளின் அடிப்படையில் உலகநாடுகள் நமது நாட்டின் அபிவிருத்திக்காக பலகோடி டொலர் உதவியாக வழங்க முன்வந்தன. சனாதிபதியின் பாராளுமன்றக் கலைப்பால் இந்த உதவிகள் நமக்கு இல்லாது போகும் ஒரு அபாயமும் ஏற்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின் ஏற்பட்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் சமஷ்டி ஆட்சி முறையொன்றினை ஏற்றுக்கொள்ளவும் இடைக்கால நிர்வாக சபை ஒன்றினைப் புலிகள் கோரியும் உள்ளனர். வரலாற்றில் முதன்முறையாக தமது கோரிக்கைகளை இடைக்கால நிர்வாகசபை யோசனையாக புலிகள் முன்வைத்துள்ளனர்.

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதிதாக செய்துகொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறுவதைப் போல செய்யமுடியுமா. இந்த நிலையில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டால் நம் நாட்டுக்கு ஏற்படும் பேரழிவும், பொருளாதார சீரழிவும் எவ்வாறு அமையும் என்பதை சமாதானத்தை மட்டுமே விரும்புகின்ற யுத்தத்தை ஒருபோதும் விரும்பாத நாட்டுமக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தங்கள் வாக்குகள் மூலம் தக்க தீர்ப்பினை வழங்கவேண்டும் என்றார். (32)

## ஐ.ம.....

போர் நிறுத்த உடன்பாட்டை கடைபிடித்து வருகின்றனர். அவர்கள் போர் நிறுத்த உடன்பாட்டை சிரத்தையுடன் கடைப்பிடித்து வருவது தமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக நாட்டில் நிலவிய சமாதானச் சூழ்நிலையானது நாட்டின் பாதுகாப்பிற்கும் இறைமைக்கும் அச்சுறுத்தலை உண்டுபண்ணியுள்ளது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இதுவரை அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவில்லை. நாட்டில் ஏப்ரல் மாதம் வரும் தேர்தலில் மக்கள் சரியான முடிவை எட்ட வேண்டும். அத்தகைய மக்களின் தீர்மானமே நிலையான சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் உருவாக்கும் என்றும் அவர் கூறினார். (32)


தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்தும்

## இலவசக் கணினிப் பயிற்சி நெறி

## புதியவேண்டுகைகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கனேடிய தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் நடாத்தி வரும் இலவச கணினி பயிற்சி நெறியின் 4ஆம் கட்ட பயிற்சி வகுப்புக்களுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

வறிய மாணவர்களின் கல்வியினை மேம்படுத்தவும், உலகின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எமது தாயகத்தின் மாணவச் செல்வங்களையும் வளர்க்கவும் த.பு.கழகம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

புதிய பிரிவில் இணைந்து கணினி அறிவைப் பெறவிரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை யாழ்சாலை கிளிநொச்சி தபாலகத் திற்கு அண்மையில் இயங்கும் த.பு.கழக இலவச கணினி பயிற்சி நிலையத்தில் நேரில் சென்று பெற்று விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 06.03.2004 க்கு முன்பாக மேற்படி நிலையத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தகைமை :- கல்விப்பொது தராதர சாதாரண தரம் போதுமானது.

நிர்வாகம்,
கணினி பயிற்சி நிலையம்,
கிளிநொச்சி.

(சி-9404)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.